வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 07 | 27.01.2026 செவ்வாய்க்கிழமை | இதழ் : 27 | பக்கங்கள் : 08




## டிராக்டர் மூலம் கரைவலைக்குத் தடை; எதிர்த்து மீனவர்கள் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 27

டிராக்டரில் இணைக்கப்பட்ட கரைவலைத் தொழிலை மேற்கொள்ளத் தடுக்கப்பட்டுள்ளதை எதிர்த்து மீனவர்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதே செயலகத்திற்குட்பட்ட சுண்டிக்குளம் - பூனைத் தொடுவாய் அண்மித்த பகுதியில் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று நண்பகல் முன்னெடுக்கப்பட்டது.

உழவியந்திரத்தில் இணைக்கப்பட்ட கரைவலைத் தொழிலை மேற்கொள்ள கடந்த அரசு காலத்தில் நீரியல் வளத் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

07



# இலங்கைக்கு இந்தியா நிபந்தனையற்ற உதவி!

## தூதுவர் சந்தோஷ் ஜா அறிவிப்பு



கொழும்பு, ஜன. 27

பொறுப்புணர்வு மற்றும் சிறந்த அயலுறவு கொள்கையின் அடிப்படையில், எந்தவித நிபந்தனைகளுமின்றி இலங்கைக்கான இந்தியாவின் உதவிகள் முன்னெடுக்கப்படுவதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

இந்தியாவின் 77ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு நேற்று இந்திய இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய அவர், இந்தியாவின் வெளியுறவு கொள்கையில் இலங்கைக்கு விசேட இடம் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இரு நாடுகளுக்கிடையிலான உறவு நம்பிக்கை, நல்லெண்ணம் மற்றும் மக்களிடையிலான உறவுகள் மூலமாக மேலும் வலுப்பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மின் சக்தி வலையமைப்பு ஒருங்கிணைப்பு, சம்பூர் சூரிய மின்சக்தி திட்டம், திருகோணமலை எரிசக்தி மைய

07

## மனித உயிர்களுடன் விளையாடாதீர்கள்!

### மருத்துவர்களை எச்சரிக்கும் அரசு

கொழும்பு, ஜன. 27

மனித உயிர்களுடன் விளையாட வேண்டாம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய வங்கியின் அனைத்து பணத்தையும் வழங்கினாலும் கூட, அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அரசியல் நோக்கங்கள் நிறைவேறாது என பிரதி சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜயமுனி தெரிவித்துள்ளார்.

அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாடு முழுவதும் நடத் திய வேலை நிறுத்தம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அரசாங்கம் குறைந்த பட்ச அதிகாரத்தைக்கூட இதுவரையில் பயன்படுத்தியதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மருத்துவர்களுக்கு பிரச் னைகள் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம் எனவும் அரசுக்கு கிடைக்கும் நிதி வசதிகளுக்கு ஏற்ப அந்த பிரச்னைகளை

07

## நோயாளர் பாதிக்கப்பட்டால் அமைச்சரே முழுப்பொறுப்பு!

### அரச வைத்திய அதிகாரிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 27

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நோயாளர் பராமரிப்பு சேவைகள் பாதிக்கப்படுமாயின் அதற்கு முழுமையாக சுகாதார அமைச்சும், சுகாதார அமைச்சருமே பொறுப்புக் கூறவேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதான செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகததாச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுகாதார அமைச்சருடன் முன்னர் இடம்பெற்ற

07

## வடக்கின் அபிவிருத்தி குறித்து அநுர அரசு கூடுதல் அக்கறை!

### மாகாண ஆளுநர் வேதநாயகன் கனடா தூதுவரிடம் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஜன. 27

போர் முடிவுற்ற கடந்த 16 ஆண்டுகளில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களை விட, தற்போதைய அரசாங்கம் வடக்கு மாகாணம் தொடர்பில் கூடுதல் கரிசனையுடனும், அக்கறையுடனும் செயற்படுகின்றது.

07

## புதுக்குடியிருப்பில் காணாமல்போன இளைஞர் கிணற்றில் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஜன. 27

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் காணாமல் போன இளைஞரின் சடலம் விளையாட்டுமைதான கிணற்றில் இருந்து நேற்று பிற்பகல் மீட்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரம் பகுதியில் வசித்து வரும் 24 வயதுடைய பாலசுப்

07



## யாழ்.சர்வதேச விமான நிலையம் அருகே பட்டங்களை பறக்க விடுவதற்குத் தடை!

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை சூழவுள்ள பகுதிகளில், வானத்தில் பட்டங்களை பறக்க விடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு விமான நிலைய ஆணையகம் கேட்டுக்கொண்டுள்ளது.

பட்டங்களால், விமானங்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுவதனால் விமான நிலையத்தை சூழவுள்ள பகுதிகளில், பட்டம் பறக்க விடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த அறிவுறுத்தல் தொடர்பான சுவரொட்டிகள், விமான நிலையத்தை சூவுள்ள,

07

## 30 வீத முதியோருக்கு மனநல பிரச்னைகள்!

கொழும்பு, ஜன. 27

இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் சுமார் 30 வீதம் பேர் மனநலப் பிரச்னைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் உரையாடிய மனநல மருத்துவர் மதுஷானி டயஸ், மனநலப் பிரச்னைகளால் பாதிக்கப்பட்டவர்களில் 60 அல்லது 65 வயதுக்கு மேற்பட்டவர்களே அதிகமாக உள்ளனர் என குறிப்பிட்டார்.

இலங்கையில் முதியோர்களின் எண்ணிக்கை

07

## கிவுல் ஓயா திட்டத்தை முற்றாக கைவிடுங்கள்!

### அரசிடம் சுரேஷ் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 27

மகாவலி எல் வலயத்தை உள்ளடக்கி, புதிதாக நிர்மாணிக்கப்படும் கிவுல் ஓயா திட்டம், ஏற்கனவே இருந்த அரசாங்கங்களைப் போல், தமிழ் மக்களின் காணிகளைப் பறித்து, அரசாங்க அனுசரணையுடன் தமிழ் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றத்தை ஏற்படுத்துவதையும், வடக்கு-கிழக்கு நிலத் தொடர்பை நிரந்தரமாகப் பிரிக்கும் உள்நோக்கத்தையும்,

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவி வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 27

டித்வா அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் காலை யாழ். நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தியா, தமிழ்நாடு வேலூர் ரோட்டறி கழகம் மற்றும் இராணிப்பேட்டை ராம் லெதர்ஸ் நிதியுதவியில் யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ். விஜயகாந்தின் ஏற்பாட்டில் மாணவர்களுகான இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இந்தியா, தமிழ்நாடு வேலூர் ரோட்டறி கழகம் மற்றும் இராணிப் பேட்டை ராம் லெதர்ஸ் ஆகியவற்றைச் சேர்ந்த என். பாஸ்கரன் மற்றும் கே. பாரத், நல்லூர் சங்கிலியன் மன்றத் தலைவர் டாக்டர் கே. ஜனகன், ஓய்வு நிலை கிராம சேவகர் இ.சந்திரகுமார், யாழ். மாநகரசபை உறுப்பினர் திருமதி சுகிர்தராஜ் சரஸ்வதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் 150 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், புத்தகப் பைகள் என்பன வழங்கப்பட்டன.

(அ-02)




## யாழில் இந்திய குடியரசு தினம்

யாழ்ப்பாணம், ஜன. 27

இந்தியாவின் 77ஆவது குடியரசு தினமான நேற்று திங்கட்கிழமை இந்தியத் துணைத் தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இந்திய தேசியக் கொடியேற்றி நிகழ்வுகள் இடம்பெற்றன

இந்திய துணைத் தூதரகத்தில் யாழ்ப்பாணம் இந்திய துணை தூதுவர் சாய் முரளி இந்திய தேசிய கொடியை ஏற்றிவைத்தார்.


தொடர்ந்து இந்திய ஜனாதிபதியின் குடியரசு தின வாழ்த்து செய்திகள் வாசிக்கப்பட்டது. தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (அ)



# தவறிழைப்போருக்கு எதிராக அரசு தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை!

### வடக்கு மாகாண ஆளுநர் அறிவிப்பு





யாழ்ப்பாணம், ஜன. 27

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தை மக்கள் தெரிவு செய்ததற்கான பிரதான காரணமே, இதுவொரு ஊழலற்ற நிர்வாகம் என்பதால் தான். இந்த அரசாங்கத்துக்கு யாருடனும் இரகசியக் கொடுக்கல் வாங்கல்களோ கிடையாது. எனவே, ஊழலை ஒழிப்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளதுடன், தவறிழைப்பவர்களுக்கு எதிராகத் தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்கும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஏற்பாட்டில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேசிய விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தின் முதலாவது நிகழ்வு நேற்று திங்கட்கிழமை கைதடியிலுள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது.

“நேர்மையான தேசத்தை நோக்கி“ எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இச்செயலமர்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

மக்கள் நம்பிக்கை வைக்கும் அரச சேவையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். அரச சேவையில் வெளிப்படைத்தன்மை இருந்தால் மாத்திரமே மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியும். எங்கள் கரங்கள் எப்போதும் தூய்மையானவையாக இருக்க வேண்டும். எதையும் எதிர்பார்த்து எங்கள் சேவைகள் அமையக் கூடாது. நேர்மையின்றிய தொழிற்பாடு சேவையாகக் கருதப்படாது.

மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் மற்றும் வியாபார நடவடிக்கைகளுடன் பின்னிப்பிணைந்த அரச நிர்வாகக் கட்டமைப்பு உள்ளூராட்சி மன்றங்களாகும். எனவே, இப்பிரதிநிதிகளுக்கு இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான தெளிவான அறிவு அவசியம். சில சந்தர்ப்பங்களில் “அன்பளிப்பு” என்ற பெயரில் வழங்கப்படும் பொருட்கள் கூட இலஞ்சமாகவே கருதப்படும் என்பதைப் பிரதிநிதிகள் புரிந்து கொள்ளவேண்டும்.

கட்டட அனுமதி, வியாபார அனுமதி, சோலை வரி மாற்றம் உள்ளிட்ட சேவைகளை உடனடியாகச் செய்து கொடுக்க முடியும். ஆனால், சில இடங்களில் இவை வேண்டுமென்றே தாமதப்படுத்தப்படுகின்றன. இத்தகைய இழுத்தடிப்புக்கள் இலஞ்சம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் செய்யப்படுவதாகவே கருதப்படும். இவ்வாறான செயற்பாடுகளுக்குத் தற்போதைய நிர்வாகத்தில் இடமில்லை.

கடந்த காலங்களில் அரசியல் தலைமைத்துவங்களால் பிழையானவற்றைச் செய்வதற்கு நீங்கள் தூண்டப்பட்டிருக்கலாம். ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் அவ்வாறான எந்தவொரு விடயங்களும் நடைபெறப்போவதில்லை. எனவே, உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பான, நேர்மையான சேவையை வழங்க வேண்டும்-என்றார்.

வடக்கு மாகாணத்தில் மூன்று நாட்கள் முன்னெடுக்கப்படவுள்ள இச்செயற்றிட்டத்தின் முதல் நாளான நேற்று, யாழ். மாநகர சபை மற்றும் யாழ். மாவட்டத்தின் 7 பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வளவாளர்களாக கலந்து கொண்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஆணையாளர் ஜனாதிபதி சட்டத்தரணி செத்திய குணசேகர மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன் ஆகியோர், “ஊழலற்ற உள்ளூராட்சி மன்றங்களைக் கட்டியெழுப்புதல்”, “ஊழலை எதிர்ப்பதில் உள்ளூராட்சிப் பிரதிநிதிகளின் பங்கு” மற்றும் “சட்டப் பின்னணி“ ஆகிய தலைப்புகளில் விரிவுரையாற்றினர். (அ)

## முல்லை கடற்கரையில் பெரும் பட்டத் திருவிழா!

முல்லைத்தீவு, ஜன. 27

முல்லைத்தீவு சுற்றுலாக் கடற்கரையில் நேற்று முன்தினம் மாபெரும் பட்டத்திருவிழா இடம்பெற்றது.

வட்டுவாகல் புலம்பெயர் உறவுகள் மற்றும் வட்டுவாகல் கிராமமக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த மாபெரும் பட்டத்திருவிழா நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார்.

மரபுவழியில் விருந்தினர்களது வரவேற்புடன் தொடங்கிய இந்நிகழ்வில் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து பட்டத் திருவிழாவிற்கான பட்டங்கள் விருந்தினர்களால் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து பட்டத் திருவிழா இனிதே ஆரம்பித்தது.

மிகவும் பெருந்திரளான மக்கள் இந்தப் பட்டத்திருவிழாவில் பங்கேற்றிருந்தனர். (அ)

## சுகாதார சேவைக்கு புதிதாக 213 பேர்!

கொழும்பு, ஜன. 27

அரச சுகாதார முகாமைத் ஆுவ உதவியாளர் பதவிக்காக இன்று 213 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஆட்சேர்ப்பு திறந்த போட்டிப் பரீட்சை கடந்த 2025ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

இப் பதவிக்காக 226 பேருக்கு அனுமதி கிடைத்திருந்த நிலையில், திறந்த போட்டிப் பரீட்சையின்படி தகுதி பெற்ற 246 பேர் நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தப்பட்டு, 213 பேர் அப் பதவிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி 2,617 ஆக உள்ளதுடன், 1,906 பேர் தற்போது சுகாதார சேவையில் ஈடுபட்டுள்ளனர். (அ)

## யாழ்ப்பாணத்தில் உயிர்நீத்த இந்திய படைகளுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த இந்தியப் படையினரின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில், இந்திய துணைத் தூதுவர் எஸ். சாய் முரளி அஞ்சலி செலுத்தினார்.

இந்தியாவின் 77ஆவது குடியரசு தினமான நேற்று திங்கட்கிழமை பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள இந்திய இராணுவத்தினரின் நினைவிடத்துக்கு இந்திய துணைத் தூதுவர் உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாணத்தில் 1987ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரையில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிரான போர் நடவடிக்கைகளின்போது உயிர் நீத்த இந்திய இராணுவத்தினரின் நினைவாக பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் நினைவுத் தூபி அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ)



## 10 ஏக்கர் நெல் திருட்டுத்தனமாக அறுவடை

கிளிநொச்சி, ஜன. 27

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் சுமார் 39 இலட்சம் ரூபா பெறுமதியான அறுவடைக்கு தயாராக இருந்த 10 ஏக்கர் நெல்லை திருட்டுத்தனமாக அறுவடை செய்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும் கிளிநொச்சிப் பொலிசார் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை கைது செய்து நீதிமன்றில் முன் னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
27.01.2026 செவ்வாய்க்கிழமை

விசுவாவசு வருடம், தை 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# கூட்டமைப்பாக இயங்குதல் என்பது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீளவும் இயங்குவதில் பிரச்னையில்லை என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்திருக்கின்றார். கடந்த சில நாட்களாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் பின்னணியிலேயே சிவஞானம் இதனை தெரிவித்திருக்கின்றார். பொதுவாக ஒரு அரசியல் கூட்டணியாக இயங்குவதற்கான தேவையை தேர்தல் கணக்கின் வழியாகவே நோக்குவதுண்டு.

ஈழத் தமிழர் அரசியல் சூழலில் இப்படியானதொரு பார்வைதான் மேலோங்கியிருக்கின்றது. அவ்வாறானதொரு கணக்கின் அடிப்படையில்தான் முன்னர் இலங்கை தமிழரசு கட்சி தனியாகப் போட்டியிடும் முடிவை எடுத்திருந்தது - அதனைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சி கூட்டமைப்பை உடைத்துவிட்டதான குற்றச்சாட்டுடன் புதிய அணி ஒன்றை கூட்டமைப்பின் பங்காளிகள் ஏற்படுத்திக் கொண்டனர். ஐந்து கட்சிகள் தேவை என்பதற்காக மேலும் சிலரையும் இணைத்துக் கொண்டனர்.

இதற்கு மாறாக, சிலர் கொள்கைக் கூட்டு என்னும் சொல்லையும் பயன்படுத்துவதுண்டு. அப்படியான கூட்டு ஒன்று ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றில் என்றுமே இருந்ததில்லை - இருக்கப் போவதுமில்லை. இவ்வாறு உறுதியாக கூறுவதற்கு இன்றுள்ள கட்சிகளின் தளம்பல் போக்குகள்தான் காரணம். ஏனெனில் சில மாதங்களுக்கு முன்னர் அவ்வாறானதொரு கொள்கைக் கூட்டு என்னும் சொல்லுடன்தான், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் ஒரு அணியாக செயற்படுவதற்கான உடன்பாட்டில் கையெழுத்திட்டன ஆனால் தற்போது யார், யாருடன் கூட்டில் இருக்கின்றனர் என்பதே தெரியாதவாறு சந்திப்புக்கள் இடம்பெறுகின்றன. அந்தக் கொள்கைக் கூட்டுக்கு என்ன நடந்தது? மக்கள் மத்தியிலும் கேள்விகள் இல்லை. கட்சிகளும் பொறுப்புக் கூறவுமில்லை.

இதற்கப்பால் ஒரு அரசியல் கூட்டணியாக செயற்படுவதற்கான வழியில்லையா என்னும் கேள்வியுண்டு - அதாவது. தமிழ் மக்களின் அரசியல் நலன்களை வெற்றி கொள்ளுதல் என்னுமடிப்படையில் இணைந்து செயற்படுவதுதான் மிகவும் சரியான கூட்டு. வெறும் தேர்தல் கணக்கின் அடிப்படையில் ஒன்றிணையும்போது வேட்பாளர் பிரிப்பில் மல்லுக்கட்டும் அரசியலில்தான் அது முடிவுறுவதுண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய காலத்திலும் அவ்வாறான மோதல்கள் ஊடகங்களில் பரிகசிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் ஏராளம்.

ஜனநாயகம் என்றால் அடிபடித்தான் என்று கூறிவிட்டு சாதாரணமாக இதனை கடந்து செல்ல முடியாது. ஜனநாயகத்தில் பல கருத்துக்கள் இருப்பதும், அந்த அடிப்படையில் முரண்பாடுகள் எழுவதும்தான் சாதாரணம்தான். மேலும் அது அவசியமும் கூட. ஆனால் எந்தக் கட்சிக்கு எத்தனை வேட்பாளர்கள் என்று அடிபடுவது ஜனநாயகமல்ல - மாறாக பதவி மோகம்.

கடந்த காலத்தில் இவ்வாறான அனுபவங்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இயங்கியது. இந்தப் பின்புலத்தில் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்குதல் என்பதன் பொருள் என்ன? முன்னரைப் போல் வேட்பாளர்களை பிரித்துக் கொள்வதற்கான கூட்டா அல்லது தமிழ் மக்களின் அரசியல் நலன்களை யதார்த்தபூர்வமா கையாளுவதற்காக ஓரணியாக தொழிற்படுவதற்கான கூட்டா? முதலில் இந்த கேள்விக்கான தெளிவான பதிலை கட்சிகளின் தலைவர்கள் கண்டடைய வேண்டும்.

# சூறாவளிக்கு பின்னரான மீள்குடியமர்த்தலில்
## நீண்டகால அநீதியை இல்லாமல் செய்வதற்கான வாய்ப்பு

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

அசமத்துவமான சூழ் நிலைகளில் அசமத்துவமான நடத்துமுறைகள் நியாய மற்ற விளைவுகளைக் கொண்டுவரலாம் என்பது நீதியின் ஒரு அடிப்படைக் கோட்பாடு. ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் அதன் 2026 பட்ஜெட்டில் மலையக தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு முன்னென்றும் இல்லாத வகையில் தினந்தோறும் மானியத்தை வழங்கியபோது இந்த கோட்பாட்டை ஏற்றுக்கொண்டது. அவ்வாறு செய்ததன் மூலம் பெருந்தோட்டத் துறையில் உள்ள கட்டமைப்பு ரீதியான கட்டுப்பாடுகள் அவர்களுக்கு நீண்டகாலத்துக்கு முன்னத்கவே வழங்கப்பட வேண்டிய சம்பள அதிகரிப்பு மறுக்கப்படுவதற்கு வழிவகுத்தது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

டித்வா சூறாவளி இப்போது அனர்த்த நிவாரணம் வழங்குவதிலும் மீள்குடியமர்த்தலிலும் கட்டமைப்பு ரீதியான கட்டுப்பாடுகள் இருப்பதை தெளிவாக வெளிக்காட்டியிருக்கிறது. அதனால் மீட்சிச் செயன்முறை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களை மீளக் கட்டியெழுப்புகின்ற அதேவேளை, நீண்டகால அநீதிக்கு வழிவகுத்த முக்கியமான கட்டுப்பாட்டை நீக்குவதற்கு மீண்டும் ஒரு தடவை அரசாங்கத்துக்கு வாய்ப்பு ஒன்றை வழங்குகிறது.

பெரும்பாலான மலையக தமிழ் மக்கள் வாழ்வதற்கு சொந்தத்தில் நிலத்தைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் வசிக்கின்ற வீடுகள் வரலாற்று ரீதியான காரணங்களின் விளைவாக அரசினாலும் பெருந்தோட்டக் கம்பனிகளினாலும் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன. இந்த காரணியின் விளைவாக அதே அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றைய குடிமக்களுக்கு அரசாங்கம் கிடைக்கச் செய்திருக்கின்ற நிவாரணங்களை தோட்டத் தொழிலாளர்களினால் பெறமுடியாமல் இருக்கிறது.

சூறாவளிக்கு பின்னரான காலப்பகுதியில் வீடுகளை துப்புரவு செய்வதற்கு 25 ஆயிரம் ரூபாவையும் சேதமடைந்த வீடுகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு 50 இலட்சம் ரூபாவையும் வழங்குவதாக அரசாங்கம் அறிவித்தது. ஆனால், இந்த உதவித் தொகைகளை பெறுவதற்கான வாய்ப்பு நிலம் மற்றும் வீட்டு உடைமையுரிமையுடன் பிணைக்கப்படுகிறது. இந்த நிபந்தனை தோட்டத் தொழிலாளர்களை உதவித் தொகைகளை பெறுவதில் இருந்து ஒதுக்கி வைக்கிறது.

சூறாவளிக்கு பின்னரான மீள்கட்டுமாணம் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் ஒன்றில் வீடமைப்புக்காக ஒதுக்கீடு செய்யப்படக்கூடிய போதுமான நிலம் பெருந்தோட்டப் பகுதிகளில் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது. அண்மைய வருடங்களில் சுற்றுலாத்துறை, புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் கால்நடை வளர்ப்பு உட்பட வேறு பொருளாதார நோக்கங்களுக்காக பெருந்தோட்டங்களில் கணிசமான பகுதிகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அத்தகைய நடவடிக்கைகளுக்காக பெருந்தோட்ட நிலம் ஒதுக்கீடு செய்யப்படுவது கொள் கைத் தீர்மானங்கள் அனுமதிக்கும் பட்சத்தில் அந்த நிலங்களை விடுவிக்க முடியும் என்பதை காட்டுகிறது.

மேலும், பெருப்தோட்டப் பகுதிகளில் கணிசமான நிலம் பயன்படுத்தப்படாமல் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படுவதாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகளும் அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் திரும்பத் திரும்ப ஏற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த மதிப்பீடுகள் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. இந்த கண்டுபிடிப்புகள் பிரதான கட்டுப்பாடு நிலம் இல்லா தமை அல்ல என்பதை காட்டுகிறது.

சூறாவளிக்கு பின்னரான மீள்குடியமர்த்தல்



செயன்முறை நேர்மையானதாக சகல சமூகங்களையும் உள்ளடக்குவதாக, நீதிக் கோட்பாடுகளுக்கு இசைவானதாக அமைவதை உறுதிப்படுத்தக் கூடியதாக மலையக தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு நில உடைமையுரிமையை வழங்குவதற்கு வசதியாக நில ஆணைக்குழு ஒன்றை அமைக்குமாறு தேசிய சமாதானப் பேரவை கோருகிறது. ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் சகல குடிமக்களையும் சமத்துவமான வர்களாக, பாகுபாடு எதுவுமின்றி நடத்துவதற்கு உறுதி பூண்டிருக்கிறது.

சூறாவளிக்கு பின்னரான பினபுலத்தில், நாட்டின் சுதந்திரத்தின் தொடக்கத்தில் குடியுரிமை பறிக்கப்பட்டதில் இருந்து பாரதூரமான பாகுபாட்டுக்கு உள்ளாகிவரும் ஒரு சமூகத்துக்கு நீதியைச் செய்வதற்காக இந்த சமத்துவக் கோட்பாட்டை அரசாங்கம் பிரயோகிக்கவேண்டும்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். விட்டுக்கொடுக்க வேண்டிய நாள்.

**இடபம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். லாபம் பெறும் நாள்.

**கடகம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புதுஇடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதித்துக் காட்டும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பொறுமை தேவை.

**துலாம்**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமும் உண்டு.

**விருட்சிகம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**தனுசு**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**மகரம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புது வேலை அமையும். வியாபாரம் தழைக்கும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**கும்பம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

# எழுவைதீவு வீரபத்திரர் ஆலயத்தில் இரு ஐம்பொன் சிலைகள் திருட்டு!

யாழ்ப்பாணம், ஜன. 27

எழுவைதீவு வீரபத்திரர் ஆலயத்தில் இருந்த ஐம்பொன் சிலைகள் திருடப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீரபத்திரர் மற்றும் பத்திரகாளி அம்மன் சிலைகளே இவ்வாறு திருட்டு போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் எழுவை தீவுக்குச் சென்று தீவிர விசாரணையில் ஈடுபட்ட போதும் சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

திருடப்பட்ட இரு சிலைகளும் சுமார் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியானவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-03)

## அராலி வள்ளியம்மை வித்தியாசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 27

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலைக்கு உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப. தர்மகுமாரனால் நேற்று முன்தினம் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கிராமப்புற பாடசாலைகளின் விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (எ-05)



## கால்கோள் விழா



யாழ்ப்பாணம், ஜன. 27

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் தரம் ஆறு மாணவர்களுக்கான கால்கோள் விழா கல்லூரி அதிபர் தி. வரதன் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

கல்லூரியின் தரம் ஆறு மாணவர்களை கல்லூரியின் தரம் ஏழு மாணவர்கள் மாலை அணிவித்து, பூங்கொத்து கொடுத்து வரவேற்று, கால்கோள் விழா பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (எ-05)

# தேசிய கலை இலக்கிய பெருவிழாவில் சண்டிலிப்பாய் பிரதேசத்துக்கு 5 விருதுகள்

கொழும்பு, ஜன. 27

கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆண்டு தோறும் நடாத்தும் கலை இலக்கிய போட்டிகளில் தேசிய மட்டத்தில் சாதித்தவர்களுக்கான விருது வழங்கும் வைபவம் சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இந்த விருது வழங்கும் விழாவில் யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் பிரதேசத்துக்கு ஐந்து தேசிய விருதுகள் கிடைக்கப்பெற்றன.

பிரதேச மட்டம் மற்றும் மாவட்ட மட்டத்தில் முதலாமிடங்களைப் பெற்று தேசிய மட்டத்தில் சாதித்து பிரதேசத்துக்குப் பெருமை தேடித்தந்த சாதனையாளர்களின் விவரங்கள் வருமாறு.

1) திறந்த பிரிவு கவிதையாக்கம்-
முதலாமிடம் : தம்பித்துரை குணத்திலகம் (சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு)

2) திறந்த பிரிவு நாட்டார் கலைகற்றல் (ஆய்வு)-
இரண்டாமிடம் : அபிராமி (அல்லுண்ணி வீதி, சண்டிலிப்பாய்)

3) திறந்த பிரிவு பாடலாக்கம்-
மூன்றாமிடம் : தம்பித்துரை குணத்திலகம் (சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு)

4) அதி சிரேஷ்ட பிரிவு பாடல் நயத்தல் போட்டி-
முதலாமிடம்: த. ஷரா - (மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி)

5) சிறுவர் பிரிவு கையெழுத்துப் போட்டி- இரண்டாமிடம் : எஸ். வயோமிகா (மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை)

விருது மற்றும் சான்றிதழுடன் பணப்பரிசாக முதலாமிடம் பெற்றோருக்கு 15,000 ரூபாயும் இரண்டாமிடத்துக்கு 12,500 ரூபாயும் மூன்றாமிடத்துக்கு 10,000 ரூபாயும் வழங்கப்பட்டன. (எ-05)

# யாழில் கண்ணம்மா படத்துக்கு வரவேற்பு


யாழ்ப்பாணம், ஜன. 27

முற்று முழுதாக இலங்கை கலைஞர்களின் பங்கேற்பில் தயாரிக்கப்பட்ட "கண்ணம்மா" திரைப்படத்தின் சிறப்புத் திரையிடல் யாழ். ராஜா திரையரங்கில் சனிக்கிழமை நடைபெற்றது.

திரையரங்கு நிறைந்த பார்வையாளர்கள் மத்தியில் திரையிடப்பட்ட கண்ணம்மாவுக்கு பலத்த வரவேற்பும் பாராட்டுக்களும் கிடைக்கப்பெற்றன.

அடுத்த திரையிடல்கள் தொடர்பில் படக்குழுவினர் விரைவில் அறிவிப்பார்கள்.

2ஜே மூவீஸ் தயாரிப்பில் யூட் சுகியின் இயக்கத்தில் உருவாகியுள்ள கண்ணம்மா திரைப்படத்துக்கு பிரசாந் கிருஷ்ணபிள்ளை இசையமைத்துள்ளார். படத்தொகுப்பை சிவநேசன் மேற்கொண்டுள்ளார்.



மூத்த கலைஞர்களான ராஜா மகேந்திரசிங்கம், ஜூட் கொலின்ஸ், சபேசன் சண்முகநாதன், சுட்டன் பாஸ்கரன், சுவிஸ் ரகு, ஜாஸ்மின், ஜீவேஸ்வரன் உள்ளிட்டவர்களுடன் பல இளம் கலைஞர்களும் இதில் நடித்துள்ளனர். (எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஆண்டில் மட்டும் இலங்கையில் 1 பில்லியன் டொலர் நேரடி முதலீடுகள்!

## முதலீட்டு சபை தகவல்

கொழும்பு, ஜன. 27

இலங்கையின் முதலீட்டு சபை 2025 ஆம் ஆண்டில் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது.

அதன்படி, குறித்த ஆண்டில் வெளிநாட்டு நேரடி முதலீடு வரவு 1,057 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது.

இது 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 72 வீத அதிகரிப்பு ஆகும்.

இந்த வளர்ச்சி, மேம்படுத்தப்பட்ட பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் மேம்பட்ட முதலீட்டு வசதிகளால் ஆதரிக்கப்படும் புதுப்பிக்கப்பட்ட உலகளாவிய முதலீட்டாளர் நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது.

2025 ஆம் ஆண்டில் மொத்தம் 188 நிறுவனங்கள் நாட்டில் முதலீடு செய்தன.

இதில் 24 புதிய திட்டங்கள் 134 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது மொத்த அந்நிய நேரடி முதலீட்டில் 13 வீதம் பங்களித்தன.

மீதமுள்ள 923 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஏற்கனவே உள்ள செயல்பாடுகளில் விரிவாக்கங்கள் மற்றும் மீள் முதலீடுகள் மூலம் வந்ததாக இலங்கையின் முதலீட்டு சபை கூறியுள்ளது.

உற்பத்தித் துறை 46 வீதத்துடன் முன்னணியில் இருந்தது, அதைத் தொடர்ந்து துறைமுக மேம்பாடு 26 வீதம் மற்றும் சுற்றுலா 11 வீதம் ஆகும்.

சிங்கப்பூர், இந்தியா, பிரான்ஸ், நெதர்லாந்து மற்றும் லக்சம்பர்க் ஆகியவை முதன்மையான முதலீடுகளின் நாடுகளாகும்.

வாரியம் 2026 ஆம் ஆண்டிற்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு நேரடி முதலீடு இலக்கை நிர்ணயித்துள்ளது.

மேலும், உயர்தர முதலீட்டாளர்களை ஈர்க்க 20 கட்டமைக்கப்பட்ட முதலீட்டு திட்டங்களைத் தொடங்க திட்டமிட்டுள்ளது.

(அ)

# போதைக்கு அடிமையான மகனை வெட்டிக் கொலை செய்த தந்தை!

கொழும்பு, ஜன. 27

பொலனறுவை, மெதிரிகிரியை பிரதேசத்தில் 24 வயதுடைய இளைஞர் ஒருவர் அவரின் தந்தையால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான மேற்படி இளைஞர், தந்தையாருடன் முரண்பட்டு வீட்டில் தொடர்ந்து குழப்பங்களை ஏற்படுத்தி வந்துள்ளார்.

இது இறுதியில் கொலையில் முடிவடைந்துள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கொலையாளியான 48 வயதுடைய உயிரிழந்தவரின் தந்தையை கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் பணி நீக்கம் ஜனநாயகமற்ற செயல்

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 27

பாராளுமன்றத்தின் பிரதிச் செயலாளர் நாயகமாகப் பணியாற்றிய சமிந்த குலரத்னவை பணி இடைநீக்கம் செய்தமை ஜனநாயகமற்ற செயல் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பவுள்ளதாகவும் அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டு குறிப்பிட்டுள்ளார்.

தண்டனை வழங்குவதற்கு முன்னர் விடயங்களை விசாரிக்கும் ஜனநாயக உரிமையை எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு செயற்படாமையினால் தனிப்பட்ட பழிவாங்கல் குறித்த சந்தேகம் எழுவது சாதாரண இயல்பு எனவும், இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது ஆபத்தானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(அ)

# பிரதி அமைச்சரரைப் போன்று ஆள்மாறாட்டம் செய்து மோசடி!

கொழும்பு, ஜன. 27

தன்னைப் போல ஆள்மாறாட்டம் செய்து நிதி மோசடி செய்யும் ஒருவர் குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தொழில் மற்றும் தொழில்முனைவு மேம்பாட்டு அமைச்சின் பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பேஸ்புக் பதிவில் பதிவிட்ட பிரதி அமைச்சர்,

அத்தகைய நபர்களுடன் பணம் அல்லது தனிப்பட்ட விவரங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டாம் என்றும், சந்தேகத்திற்கிடமான எந்தவொரு செயலையும் உடனடியாக காவல்துறை அல்லது சம்பந்டிதப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும் என்றும் அவர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார். (அ)

# அருட்தந்தையை தாக்கினரென கைதான பொலிஸ் அதிகாரிகள் விளக்கமறியலில்!

கொழும்பு, ஜன. 27

மோட்டார் சைக்கிளில் பயணித்த கத்தோலிக்க பாதிரியார் ஒருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கம்பஹா பொலிஸ் நிலையத்தை சேர்ந்த ஆறு பொலிஸ் உத்தியோகஸ்தர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கத்தோலிக்கப் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ள கொட்டதெனியாவவில் உள்ள ஒரு பண்ணையில் உதவி தோட்ட நிர்வாகியாகப் பணிபுரியும் அருட்தந்தை, திப்பிட்டிக்கொட தேவாலயத்தில் வழிபாட்டை நடத்திவிட்டுத் திரும்பும்போதே தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு இலக்கான மதகுரு, நீர்கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரிகளும் பணியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ள நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட 06 பொலிஸ் உத்தியோகத்தர்களையும் மன்றில் முற்படுத்தியவேளை, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

(அ)

# 3 கிலோ ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த ஒருவர் கைதானார்!

கொழும்பு, ஜன. 27

மூன்று கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருளுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி 30 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர், பாதாள உலகக் குழு உறுப்பினர்களான 'வெலிஓயா பிரியந்த' மற்றும் 'எஸ்.எவ். ஜகத்' ஆகியோரின் நெருங்கிய சக என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அவர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்கள் மற்றும் பெரிய அளவிலான போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படுவதுடன், தற்போது வெளிநாட்டில் மறைந்திருப்பதாக நம்பப்படுகிறது.

பம்பலப்பிட்டி பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது, பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அதிகாரிகள் 3 கிலோ 16 கிராம் ஐஸ் போதைப் பொருள், ஒரு மொபைல் போன் மற்றும் இரண்டு மின்னணு எடை அளவுகோல்களை பறிமுதல் செய்தனர்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள தேசிய கட்சிகள் எங்களுக்கு விடிவுதராது

## இலங்கை தமிழ் அரசு கட்சி பதில் தலைவர்

மட்டக்களப்பு, ஜன. 27

சிங்கள தேசிய கட்சிகள் எங்களுக்கு விடிவுதராது என்றும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி எந்தவித நிபந்தனைகளும் இன்றி தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக இணைந்து செயல்படுவதற்கு தயாராகவுள்ளதாக தெரிவித்துள்ளது- இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர். சீ. மூ. இராசமாணிக்கம் சமாணிக்கத்தின் 113 ஆவது ஜனன தின நிகழ்வு களுவாஞ்சிக்குடி சீ. மூ. இராசமாணிக்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை தமிழ் அரசுக்கட்சியை பொறுத்த வரை முதன்மைக்கட்சியாக இருந்தாலும் கூட தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்துக்கொண்டு பயணிக்கவேண்டிய கடப்பாடு எங்களுக்கு உண்டு. அந்த பொறுப்பினை நாங்கள் இந்த வருட ஆரம்பத்தில் ஆரம்பித்தோம்.

கடந்த உள்ளூராட்சி மன்றம், பாராளுமன்றத் தேர்தல்களின் போது எதிரும் புதிருமாக நின்ற ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியுடனான ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கின்றோம். அதில் ஒவ்வொரு கட்சியும் தங்களின் தனித்துவங்களைப் பேணிக்கொண்டு செயல்படுவது என்ற இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கின்றோம்.

மீண்டும் எங்களுடன் வந்து இணைந்து கொள்ளுங்கள் என்று நானும் பதில் பொதுச்செயலாளரும் அழைப்பு விடுத்திருக்கின்றோம். அந்த அழைப்பை தொடர்ந்து ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியை பொறுத்த வரையில் அவர்கள் எந்த நிபந்தனையையும் விதிக்கவில்லை. பரந்தமனப்பான்மையுடன் எங்களுடன் பேசினார்கள். அவ்வாறானதொரு நிபந்தனையற்ற இணைவுகளை ஏனையவர்களிடமிருந்தும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

சிங்கள தேசிய கட்சிகள் எங்களுக்கு விடிவுதராது. அவர்களது கட்சிக்குள் எங்களுக்கு மக்களும் ஊடுருவி பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாக உள்ளனர். ஆனால், அவர்களுக்கு சிங்கள தலைமைகளுக்கு மேலாக செல்ல முடியாது."- என்றார். (எ)

# மண்சரிவு அபாயத்தால் மூடப்பட்டிருந்த பாடசாலையை மீளத் திறக்க பரிந்துரை

கண்டி, ஜன. 27

மண்சரிவு அபாயம் காரணமாக சுமார் 02 மாதங்களாக மூடப்பட்டிருந்த கண்டி- நாவலப்பிட்டி அனுருத்த குமார ஆரம்பப் பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தேவையான பரிந்துரையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நேற்று முன்தினம் வழங்கியுள்ளது.

கடந்த நவம்பர் 27 ஆம் திகதி நிலவிய சீரற்ற வானிலையுடன், இப்பாடசாலைக்கு மேலே அமைந்துள்ள சிறீ கவீஷ்வர வேலுவனாராம விகாரையின் பாதுகாப்பு மதில் மண்சரிவுக்கு உள்ளானது.

இதன் காரணமாக, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின் பேரில் சுமார் இரண்டு மாத காலமாக குறித்த பாடசாலை மூடப்பட்டிருந்தது.

புத்தாண்டில் முதல் பாடசாலை தவணை ஆரம்பிக்கப்பட்ட போதிலும்இ தரம் 01 முதல் தரம் 05 வரையான வகுப்புகளை நடத்த இதுவரை முடியாமல் போனதையடுத்துஇ இது குறித்து பெற்றோர்களுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் இடையில் கடும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

அரசியல் முரண்பாடுகள் காரணமாகவே, சரிந்து விழுந்த மண் மேட்டை அகற்றி பாடசாலையை மீண்டும் திறக்கவில்லை என பெற்றோர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இதற்கமைய, நேற்று முன்தினம் குறித்த இடத்தை மீண்டும் ஆய்வு செய்த புவிச் சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் புவிச் சரிதவியல் அதிகாரி சமந்த போகஹபிட்டிய, பாடசாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கினார். (எ)

### பொகவந்தலாவையில் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது!

நுவரெலியா, ஜன. 27

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிங்சின்வத்தை பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து இரத்தினக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் பொகவந்தலாவை பகுதியைச் சேர்ந்த 29 மற்றும் 43 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

வடக்கு - கிழக்கு உட்பட

# நாட்டின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை

கொழும்பு, ஜன. 27

வடக்கு, வடமத்திய, கிழக்கு, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றர் அளவான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் காலை வேளையில் பனி மூட்டமான நிலை காணப்படலாம்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (எ)

# 80 உயிர்களை நூலிழையில் காப்பாற்றிய பஸ் சாரதி!

ஹற்றன், ஜன. 27

தலவாக்கலையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடவத்த இலங்கை போக்குவரத்து சபை சாலை பேருந்து திடீரென கட்டுப்பாட்டை இழந்து, மலையில் மோதியது.

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் உள்ள கினிகத்தேன கடவல மஹா வாங்குவா பகுதியில் நேற்று அதிகாலை 05:30 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டது. பேருந்து வளைவில் செல்ல முயன்றபோது, பேருந்தை கட்டுப்படுத்த இரண்டாவது கியரை மாற்றியதாகவும் அந்த நேரத்தில் பேருந்தின் பிரேக் சிஷ்டம் செயலிழந்ததால், பிரேக்குகளை பயன்படுத்தி ஒரு சாய்வான பகுதியில் உள்ள ஒரு மலையில் சென்று பேருந்தை நிறுத்தியதாகவும் தெரியவருகிறது. விபத்து இடம்பெற்ற நேரத்தில் பேருந்தில் சுமார் 80 பயணிகள் இருந்தனர். மேலும், பேருந்து சாரதி மற்றும் நடத்துநர் அந்த பயணிகளை வேறொரு பேருந்தில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தனர். (எ)

# லொறி- அம்புலன்ஸ் மோதி கோர விபத்து

தம்புள்ளை, ஜன. 27

தம்புள்ளை - ஹபரணை பிரதான வீதியின் ஹபரணை, ஹிரிவடுன்ன பகுதியில் சிறிய லொறி ஒன்று அம்புலன்ஸ் உடன் மோதி விபத்துக்குள்ளானது. நேற்று முன்தினம் நண்பகல் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் லொறி சாரதியும் உதவியாளரும் படுகாயமடைந்து தம்புள்ளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அம்புலன்ஸில் வந்த நோயாளி ஒருவரும் காயமடைந்துள்ளதோடு அதன் சாரதியும் மற்றுமொரு பெண் ஊழியரும் காயமடைந்து அவர்களும் தம்புள்ளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் ஹபரணை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

லொறி சாரதியின் கவனயீனமே இந்த விபத்துக்கு காரணம் என்று ஹபரணை பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# வீட்டுப்பணிப் பெண்ணாக சென்ற மலையக சிறுமி துஷ்பிரயோகம்

## கல்முனையில் ஒருவர் கைது

கல்முனை, ஜன. 27

வீட்டுப்பணிப் பெண்ணாக சென்ற சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சந்தேகத்தின் பேரில் 37 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவில் உள்ள புறநகர் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கடந்த 18ஆம் திகதி கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சிறுவர் - பெண்கள் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, மலையக பகுதியை சேர்ந்த 15 வயது சிறுமி பாதிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது கல்முனை பகுதியில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த 15 ஆம் திகதி குறித்த வீட்டில் பணிப்பெண்ணாக செயற்பட்ட போது இரவு தன்னை குறித்த சந்தேகநபர் அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக சிறுமி வாக்குமூலம் வழங்கியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

மேலும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதுடன் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (எ)

சௌமிய தான யாத்திரை திட்டத்தின் கீழ்

# 100 தொன்களுக்கும் அதிகமான உணவு பொருட்கள் விநியோகம்

நுவரெலியா, ஜன. 27

சௌமிய தான யாத்திரை திட்டத்தின் கீழ், பெருந்தோட்ட பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்படவுள்ள உலர் உணவு பொருட்களை இ. தொ. கா. தலைவர் செந்தில் தொண்டமான் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார்.

பெருந்தோட்ட பகுதிகளில் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சௌமிய தான யாத்திரை திட்டத்தின் கீழ், இது வரை 100 தொன்களுக்கும் அதிகமான உலர் உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில் ஏற்பட்ட டித்வா புயலால் பாதிக்கப்பட்டு இன்னும் முழுமையாக மீளாத, இயல்பு நிலைக்கு திரும்பாத மக்களுக்கு உதவிகளை வழங்கும் வகையில் இந்தத் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது என செந்தில் தொண்டமான் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு...

அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ரயில் பாதை புனரமைப்பு, துறைமுக அபிவிருத்தி, கப்பல் மற்றும் விமான சேவைகள் மூலம் இரு நாடுகளுக்கிடையிலான பௌதீக இணைப்புகள் வலுப்பெற்றுள்ளன என தூதுவர் கூறினார்.

இலங்கையின் டிஜிற்றல் அடையாள அட்டை திட்டம், யு.பி.ஐ கொடுப்பனவு முறைமை போன்றவற்றின் மூலம் டிஜிற்றல் ஒத்துழைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். 2025 ஆம் ஆண்டில் இலங்கைக்கு அதிகளவான சுற்றுலா பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில், இந்திய முதலீடுகள் முக்கிய பங்காற்றியுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கான இந்திய அபிவிருத்தி ஒத்துழைப்பு 7.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடந்துள்ளதாகவும், அதில் 850 மில்லியன் டொலர்கள் நன்கொடைகளாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

டித்வா புயலின் போது இந்தியா முதற்கண் உதவி வழங்கியதாகவும், மனிதாபிமான உதவிகள் துரிதமாகவும் நிபந்தனையற்ற வகையிலும் வழங்கப்பட்டதாகவும் தூதுவர் குறிப்பிட்டார்.

இந்தியா, இலங்கையின் நம்பிக்கைக்குரிய மற்றும் நம்பகமான பங்காளியாக தொடர்ந்து செயல்படும் என அவர் வலியுறுத்தினார். (அ)

## வடக்கின்...

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் தொடர்பில் இவ்வாறானதொரு அக்கறை இதுவரை காண்பிக்கப்படவில்லை என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனடா தூதுவர் இசபெல் மார்ட்டினுக்கும், வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாணப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகளே காணப்படுகின்றன. ஆனால், இங்கிருந்து இவை மூலப்பொருட்களாகவே வெளியே கொண்டு செல்லப்படுகின்றன. இவற்றை வடக்கிலேயே பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றுவதற்கான தொழிற்சாலைகள் எம்மிடம் இல்லை. இத்துறையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

இந்தியாவுடனான விமானச் சேவை விரிவுபடுத்தப்பட்டுள்ளமையால் வடக்குக்கு வரும் சுற்றுலாவிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பலாலியிலுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் வசதிகள் மேலும் மேம்படுத்தப்பட்ட பின்னர், நிச்சயமாக அதிகளவான சுற்றுலாவிகள் வருகை தருவார்கள். இதன் ஊடாக வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறை பாரிய வளர்ச்சியடையும்.

முதலீட்டாளர்கள் வடக்கில் முதலிடுவதற்குச் சாதகமான சூழல் தற்போது உருவாகியுள்ளது. அரசாங்கத்தால் வடக்கில் மூன்று முதலீட்டு வலயங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதேபோல, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீள இயக்குவதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட "வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு" முதலீட்டாளர்கள் மத்தியில் மிகச் சாதகமான சமிக்ஞையை ஏற்படுத்தியுள்ளது-என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த தூதுவர், டித்வா பேரிடர் பாதிப்பு மற்றும் அதிலிருந்தான மீள்கட்டுமானப் பணிகள் குறித்தும், வடக்கு மாகாணத்தின் கூட்டுறவுத் துறையின் வளர்ச்சி குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

இச்சந்திப்பில் ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் இணைப்புச் செயலாளர்கள், மாகாண சபை அதிகாரிகள் மற்றும் கனேடியத் தூதரக அரசியல் விவகாரச் செயலர் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்றனர். (அ)

## டிராக்டர்...

குறித்த அனுமதியின் பிரகாரம் உழவியந்திரத்தில் இணைக்கப்பட்ட கரைவலைத் தொழிலை மேற்கொள்ள தற்போது நீரியல்வளத் திணைக்களத்தினரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் நூற்றுக் கணக்கான மீனவத் தொழிலாளர்களும் சம்மாட்டிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி குறித்த விடயத்தில் கவனம் செலுத்தி தமக்கு கால அவகாசத்தை வழங்க வண்டும் என்றும் உடனடியாக நிறுத்தும் பட்சத்தில் பல கோடி ரூபாய் நட்டத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதுடன் ஆயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாகி நிர்க்கதியாக வேண்டி ஏற்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

நாம் கரைவலைத் தொழிலை மேற்கொள்ள முடியாதவாறு நூற்றுக் கணக்கான இந்திய மீனவர்களின் ட்ரோலர் படகுகள் சுண்டிக்குளம் கடற்கரையோரத்தை ஆக்கிரமித்துள்ளன. அவற்றை கட்டுப்படுத்த முடியாத நீரியல்வளத் திணைக்களத்தினர், எமது வாழ்வாதாரத்தை தடுத்து நிறுத்துகின்றனர் என மீனவர்கள் கவலை தெரிவித்தனர். (அ)

## கிவுல்...

நாட்டின் பூர்வீக குடிகளான தமிழர்கள், தமது சொந்த பிரதேசத்திலேயே இரண்டாம் தரக் குடிமக்களாக மாற்றப்படுவதையும் நோக்காக கொண்டுள்ளது எனவும், அதனால், இத்திட்டம் முழுமையாகக் கைவிடப்பட வேண்டும் எனவும், ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது அறிக்கையில்-

வவுனியா வடக்கு பிரதேசத்தையும் முல்லைத்தீவு மணலாறு பிரதேசத்தையும் உள்ளடக்கக் கூடிய வகையில் 23 ஆயிரத்து 456 மில்லியன் ரூபா செலவில் கிவுல் ஓயா என்ற ஒரு நீர்ப்பாசனத் திட்டத்திற்கான அணைக்கட்டு ஒன்றைக் கட்டுவதற்கு, அனுரகுமார அரசானது, 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவை முதல் கட்டமாக ஒதுக்கியுள்ளது.

இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் இந்த வேலைத் திட்டமானது, எதிர்வரும் 2031ஆம் ஆண்டு முடிவுறுத்தப்படும் எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவ்வாறு, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்லாயிரம் மில்லியன் ரூபாய்களுக்குக் கடனாளியாகி நாட்டை வங்குரோத்தில் வைத்திருக்கும் நீங்கள், சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிறுவுகின்ற நோக்கில், மேலும் 23 ஆயிரத்து 456 மில்லியன் ரூபாவை செலவு செய்யமுற்படுகிறீர்கள் என்றால், இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும் நாட்டில் அபிவிருத்தியையும் எவ்வாறு கொண்டுவருவீர்கள்?.

உண்மையில் ஜனாதிபதி, நாட்டின் ஒருமைப்பாட்டையும் மக்களிடையே நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த விரும்பினால், இத்திட்டத்தை முற்றுமுழுதாகக் கைவிடவேண்டும்-என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

## யாழ்...

காங்கேசன்துறை, மாவிட்டபுரம், வறுத்தலைவிளான், பலாலி, மயிலிட்டி உள்ளிட்ட பிரதேசங்களில் ஒட்டப்பட்டுள்ளதுடன், அது தொடர்பிலான அறிவுறுத்தல், அப்பகுதியில் ஒலி பெருக்கி மூலமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சென்னையில் யாழ்ப்பாணம் வருகை தந்த விமானம் தரையிறங்க முற்பட்டவேளை பட்டத்தினால், சிரமங்களை எதிர்கொண்டதாகவும், அதனால் பாரிய விபத்து ஏற்படவிருந்த நிலையில் விமானம் பாதுகாப்பாக தரையிறங்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.(அ)

## 30 வீத...

வேகமாக அதிகரித்து வருவதாகவும், முதியோர் எதிர்கொள்ளும் மனநலப் பிரச்னைகள் குறித்த சமூக விழிப்புணர்வு இல்லாததால் ஏராளமான சவால்கள் எழுந்துள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார்.

மேலும் முதியவர்களிடையே நினைவாற்றல் இழப்பு, மனச்சோர்வு போன்ற அறிகுறிகள் பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை அல்லது புறக்கணிக்கப்படுகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் முதியோர்களிடையே மனநலப் பிரச்னைகள் குறிப்பிடத்தக்களவு பொது சுகாதார பிரச்னையாக மாறியுள்ளபோதிலும், போதுமான பாதுகாப்பு மற்றும் ஆதரவான கட்டமைப்பு இல்லாதது மிகப்பெரிய சவாலாக உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## நோயாளர்...

கலந்துரையாடல்களின் போது எமது முன்மொழிவுகளுக்கு அவர் எழுத்துமூலம் இணக்கம் தெரிவித்தார். எனினும் வாக்குறுதியளித்தவாறு அதனை நடைமுறைப்படுத்த தவறியமையினால் இவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட நேரிட்டுள்ளது.

இந்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நோயாளர் பராமரிப்பு சேவைகள் பாதிக்கப்படுமாயின் அதற்கு முழுமையாக சுகாதார அமைச்சும், சுகாதார அமைச்சருமே பொறுப்புக் கூற வேண்டும்.

அவர்கள் தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றியிருந்தால் எமக்கு இவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு செல்லவேண்டிய எவ்வித அவசியமும் ஏற்பட்டிருக்காது.

வைத்தியத் தொழிலை விசேட சேவைப் பிரிவாகக் கருதி நிபுணத்துவ வைத்தியர்கள், தர வைத்தியர்கள் மற்றும் நிர்வாகத் துறையிலுள்ள வைத்தியர்களை இனங்கண்டு அவர்களுக்கு விசேட சம்பளக் கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்த சுகாதார அமைச்சர் வாக்குறுதியளித்தார். அது பாராளுமன்ற வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்டு ஹன்சார்டில் பதிவு செய்யப்பட்டிருந்தபோதிலும், இதுவரை அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கவில்லை.

டெட் கொடுப்பனவை இற்றைப்படுத்தல், மேலதிக கடமைக் கொடுப்பனவை நிரந்தரக் கொடுப்பனவாக மாற்றி அதனை சம்பளத்துடன் சேர்த்தல் உள்ளிட்ட முன்மொழிவுகள் தொடர்பில் ஜனவரி 5 ஆம் திகதிக்கு முன்னர் திறைசேரி அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை பெற்றுத்தருவதாக வாக்குறுதியளிக்கப்பட்டபோதிலும், அதற்கும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை.

எவ்வாறாயினும், இந்த தொழிற்சங்க நடவடிக்கையின் ஊடாக அவசர நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதில் எவ்வித சிக்கலும் ஏற்படாது. எமது சங்கம் நோயாளர்களின் உயிரை ஆபத்தில் வீழ்த்தாது-என்றார். (அ)

## மனித...

தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் எனவும் அவர் கூறினார்.

சுமார் நூறு ஆண்டுகளாக இயங்கி வரும், தற்போது பக்குவ நிலை அடைந்திருக்க வேண்டிய ஒரு தொழிற்சங்கம் இவ்வளவு கட்டுப்பாடின்றி செயல்படுவது குறித்து கேள்வி எழுகிறது என அவர் தெரி வித்தார்.

நோயாளிகளை முன்வைத்து தங்களது கோரிக்கைகளை முன்னெடுக்க முயல்கிறார்கள் எனவும் மனித உயிர்களுடன் விளையாட வேண்டாம் எனவும் அமைச்சர் கூறினார். (அ)

## புதுக்குடியிருப்பில்...

பிரமணியம் சாம்சன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு சுமார் 7.30 மணியளவில், குறித்த இளைஞனின் வீட்டுக்கு வந்த நபர் ஒருவர் வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் குறித்த இளைஞனை ஏற்றி சென்றதாகவும், அதன் பின்னர் அவர் தொடர்பில் எந்த தகவ லும் கிடைக்கவில்லை என்றும், இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் அவரது தாயார், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் நேற்று காலை முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டையடுத்து சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் காணாமல் போன குறித்த இளைஞனின் வீட்டுக்கு அருகாமையில் உள்ள விடியல் விளையாட்டு மைதா னத்தில் உள்ள கிணற்றுக் கட்டில் இளைஞனின் கைத் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டதுடன், கிணற்றுக்குள் குறித்த இளைஞருடையதாக கருதப்படும் காலணி ஒன்றும் காணப்பட்டது.

அதனையடுத்து குறித்த கிணற்று நீரினை வெளியேற்றி தேடுதல் மேற்கொண்டபோது குறித்த இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது கொலையா என்ற கோணத்தில் மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சினோபெக் நிறுவனத்துடன் விரைவில் அரசு ஒப்பந்தம்!

## முடிவுக்கு வந்தது இழுபறி நிலை

கொழும்பு, ஜன. 27

இலங்கை வரலாற்றில் மிகப்பா ரிய அளவிலான அந்நிய நேரடி முத லீடான சினோபெக் எண்ணெய் சுத் திகரிப்பு நிலையத் திட்டத்தில் நிலவி வந்த இழுபறி நிலை முடிவுக்கு வந் துள்ளதாகத் தகவல்கள் வெளியா கியுள்ளன.

அம்பாந்தோட்டையில் 3.7 பில் லியன் டொலர் செலவில் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் நாளொன்றுக்கு 2 இலட் சம் கொள்கலன் மசகு எண்ணெயை சுத்திகரிக்கும் திறன் கொண்டுள்ளது.

இந்த திட்டத்தினூடாக, உள்ளூர் சந்தையில் 20 வீத எரிபொருளை மாத்திரமே விற்பனை செய்யவேண் டும் என்ற இலங்கை அரசின் நிபந்த னைக்கு சினோபெக் நிறுவனம் தற் போது இணக்கம் தெரிவித்துள்ளதா கக் குறிப்பிடப்படுகிறது.

இந்நிலையில், நீண்ட காலமாக நீடித்துவந்த சந்தை அணுகல் தொடர் பான சிக்கல் தற்போது தீர்க்கப்பட் டுள்ளதாகவும், திட்டத்தை அமுல்ப டுத்துவதற்கான ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டு வருவதாகவும் எரி சக்தி அமைச்சின் செயலாளர் உத யங்க ஹேமபால தெரிவித்துள்ளார். (அ)

## இருக்கைப்பட்டி கட்டாயம்!

கொழும்பு, ஜன. 27

அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் ஏனைய வீதிக ளில் இருக்கைப்பட்டி அணியாதவர்களுக்கு எதிராக நேற்று முதல் அபராதம் விதிக்கப்படுதாக வீதி பாது காப்பு தொடர்பான தேசிய சபை அறிவித்துள்ளது.

இருக்கைப்பட்டி சட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்காக வழங்கப்பட்டிருந்த 3 மாத கால அவகாசம் கடந்த டிசெம்பர் 24ஆம் திகதியுடன் முடிவடைந்துள் ளது என வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை யின் தலைவர் மஞ்சுள குலரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி வாகனச் சாரதி மற்றும் பயணிக்கும் அனை வரும் இருக்கைப்பட்டி அணிவது கட்டாயமாக்கப்பட் டுள்ளது.

அத்துடன் வாகனச் சாரதி மற்றும் முன் இருக்கை யில் அமர்ந்து செல்லும் பயணி ஆகிய இருவருக்கும் இச் சட்டம் பொருந்தும்.

வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், நாடு முழுவதும் இந்த விதிமுறையை மிகவும் கண்டிப்பாக நடைமுறைப்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (அ)

## இந்திய கப்பல்கள் கொழும்பில்!



கொழும்பு, ஜன. 27

இந்திய கடலோர காவல்படையின் இரண்டு ரோந் துக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு அதிகார பூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளன.

"வராஹா" மற்றும் "அதுல்யா" ஆகிய கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை நேற்று முன் தினம் வந்தடைந் தபோது, இலங்கை கடற்படையினரால், கடற்படை சம் பிரதாயங்களுக்கு அமைவாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

96.2 மீற்றர் நீளமான கடல்சார் ரோந்துக் கப்பலான "வராஹா" கப்பல், கட்டளை அதிகாரி அஷ்வினி குமாரி னால் வழிநடத்தப்படுகிறது.

50 மீற்றர் நீளமான அதிவே ரோந்துக் கப்பலான "அதுல்யா" கப்பல், கட்டளை அதிகாரி அனித் குமார் மிஸ்ராவினால் வழிநடத்தப்படுகிறது.

இந்தக் கப்பல்கள் இலங்கை கடலோர காவல்படை யினருடனான பயிற்சிகளில் பங்கேற்கவுள்ளன. (அ)

## கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களும் வேலைநிறுத்த போராட்டத்துக்குத் தயார்!

கொழும்பு, ஜன. 27

மாளிகாவத்தை வைத்தியசாலையின் பிரதிப் பணிப் பாளரை பணிநீக்க கோரி தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட தயாராக இருப்பதாக கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மாளிகாவத்தை சிறுநீரக வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மேற்கொண்ட சட்டவிரோத செயற்பாடு கள் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும், அவரை பணி நீக்கம் செய்யவேண் டும் எனவும் கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங் கம் கடந்த 21ஆம் திகதி சுகாதார பிரதி அமைச்சரிடம் தெரிவித்திருந்தது.

இது குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என சுகாதார பிரதி அமைச்சர் உறுதியளித்திருந்தபோதிலும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதால் தொடர் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட தயா ராக இருப்பதாக கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் செயற்பாடுகள் பக்கச்சார்பாக இருப்பதாக கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டுகிறது.

இந்தப் பிரச்னைக்குத் தீர்வு கிடைக்கும் வரை நாடளா விய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளின் கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் நாளை காலை 8 மணி முதல் தொடர் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட வுள்ளதாக கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங் கம் தெரிவித்துள்ளது. (அ)

## அரச வைத்தியசாலையில் இனி சோதனைக்குழாய் கருத்தரிப்பு!

கொழும்பு, ஜன. 27

கொழும்பு காசல் வீதி மகளிர் மருத்துவமனையில் மிக விரைவில் சோதனைக்குழாய் கருத்தரிப்பு (ஐ.வி.எவ்) சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அந்த மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்தியர் அஜித் குமார தந்த நாராயண தெரிவித்துள்ளார்.

இந்த புதிய வசதிகள் இன்னும் மூன்று மாதங்களுக்குள் செயல்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார் மருத்துவமனைகளில் இந்தச் சிகிச்சையைப் பெற முடியாத தம்பதிகளுக்கு, பொதுச் சுகாதாரத் துறை யினூடாக ஒரு நியாயமான வாய்ப்பை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

தற்போது இலங்கையில் ஒரு சில தனியார் மருத்துவ மனைகளில் மட்டுமே இந்தச் சேவை உள்ளது.

ஒரு முறை சிகிச்சைக்கு 2 மில்லியன் முதல் 3 மில்லி யன் ரூபா வரை செலவாகிறது.

இந்தச் சிகிச்சை முறை குறிப்பாக, கருப்பை குழாய்க ளில் அடைப்பு, விந்தணுக்களின் எண்ணிக்கை குறைவாக இருத்தல், ஹோர்மோன் குறைபாடுகள், நீண்ட காலமாக இனங்காணப்படாத மலட்டுத் தன்மைபோன்ற குறைபா டுகள் உள்ள தம்பதியினருக்கு உதவுகின்றது.

அரச மருத்துவமனைகளில் இது அறிமுகமாவதன் மூலம் சாதாரண மக்களும் தங்களது பெற்றோர் கனவை நனவாக்க இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் என எதிர் பார்க்கப்படுகிறது. (அ)

## சட்ட சிக்கலுக்கு தீர்வு கண்டால் உடனே மாகாண சபை தேர்தல்!

### தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர்



கொழும்பு, ஜன. 27

மாகாணசபைத் தேர்தல் முறை மையில் ஆராய்வதற்கு பாராளுமன் றத்தால் நியமிக்க உத்தேசிக்கப்பட் டுள்ள குழுவில் முன்னிலையாகி எமது தரப்பு யோசனைகளை முன்வைக்க தயாராகவுள்ளோம். நடைமுறை யில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு கண்டால் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் நட வடிக்கைகளை மேற்கொள்வோம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து வினவிய போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபைத் தேர்தலை விரை வாக நடத்தவேண்டும் என்ற நிலைப் பாட்டில் உறுதியாக உள்ளோம். தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கலினால் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலை காணப்படுகிறது.

மாகாண சபைத் தேர்தலில் காணப் படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு காண் பதற்கு கடந்த காலங்களில் நியமிக் கப்பட்ட குழுக்களுக்கு பல யோச னைகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம்.

தேர்தல் சட்டத்தில் உள்ள சிக்க லுக்கு பாராளுமன்றத்தின் ஊடாக தீர்வு காணப்படவேண்டும் என்று உயர்நீதிமன்றம் வியாக்கியானம் ளித்துள்ளது. ஆகவே இந்த விடயத் தில் பாராளுமன்றம் சிறந்த தீர்மா னத்தை எடுக்கவேண்டும்.

மாகாணசபைத் தேர்தலை பழைய யத் தேர்தல் முறையிலோ அல்லது புதிய தேர்தல் முறையிலோ நடத்த வேண்டும் என்று அரசியல் தரப்பில் குறிப்பிடப்படுவதை அவதானிக்க முடிகிறது. கடந்த காலங்களை காட் டிலும் தற்போது மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் அதிக கரிசனை கொள்ளப்பட்டுள்ளமை வரவேற்கத் தக்கது.

மாகாண சபைத் தேர்தல் தொடர் பில் ஆராய்ந்து விதப்புரைகளை முன்வைப்பதற்கு 12 பேரை உள்ள டக்கிய குழு ஒன்றை நியமிக்கும் யோசனை பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட் டுள்ளது. இது சிறந்ததொரு தீர்மா னமாகும்.

பாராளுமன்ற உத்தேச தெரிவுக் குழுவில் முன்னிலையாகி தேர்தல் முறைமை தொடர்பிலும், மாகாண சபைத் தேர்தல் முறைமை குறித்த யோசனைகளை முன்வைக்கவுள் ளோம். இந்த குழு ஊடாக ஒரு தீர்வு எட்டப்பட்டால் மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்தலாம்- என்றார். (அ)

## போதைப்பொருளுக்கு அடிமையானோருக்கு சகல மாவட்டங்களிலும் புனர்வாழ்வு மையம்!

### பிரேரணை முன்வைத்தார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஜன. 27

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ள வர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் பொருட்டு சகல மாவட் டங்களிலும் அனைத்து வசதிகளுடனும் புனர்வாழ்வு மத் திய நிலையம் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளும ன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தனிநபர் பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் முன்வைத்துள்ளார்.

அவர் தனது பிரேரணையில்-

நாட்டில் ஹெரோய்ன் உட்பட நச்சுப் போதைப்பொ ருள் பாவனையாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதி கரித்துள்ளது.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் குறித்த ஒரு பிரதேசத்தில் மாத்திரமன்றி நாடெங்கிலும் பரந்து காணப்படுவதால் இவர்களின் ஊடாக போதைப்பொ ருள் பாவனை மேலும் தீவிரமடைந்துள்ளது.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்க ளுக்கு புனர்வாழ்வளிக்கும் நிலையங்கள் நாட்டின் ஒரு சில பிரதேசங்களில் மாத்திரம் காணப்படுவதானது போதைப்பொருள் பாவனையாளர்களின் எண்ணிக் கையை கட்டுப்படுத்துவதில் பாரியதொரு பிரச்னையாக மாறியுள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு குறைந் தபட்சம் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அனைத்து வசதி களையும் கொண்ட ஒரு புனர்வாழ்வு நிலையத்தையே னும் அமைக்கவேண்டும்-என குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.